2012 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

திருமதி ச. முத்துசெல்வி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதைக் கொடுக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளை சங்கரன்கோவில் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 48, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

மீன் பதனிடுதல்

***5325—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்களை குளிர்பதன முறையில் பதப்படுத்தி அவற்றினை விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் 13 கடலோர மாவட்டங்களிலுள்ள மீன்பிடி நகரங்களில் மீன் பதனிடும் பூங்காக்கள் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் முன்னோடித் திட்டமாக, சென்னை மற்றும் நாகப்பட்டினத்தில் இப்பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து முன்னோடித் திட்டத்தின் சிறப்பைப் பொறுத்து, பிற கடலோர மாவட்டங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்திலும் மீன் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 4

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதிடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடிக்கும் சகோதரர்கள் ஆழ்கடல் மீன்பிடிப்பில் அதிகமாக மீன்கள் கிடைக்கும்போது அந்த மீன்கள் கெட்டுப்போகாமல் சேமித்து வைப்பதற்காக, அரசு அறிவித்துள்ள மிதக்கும் மீன் பதப்படுத்தும் திட்டம், சிறிய ரக படகுகள் மூலமாக பிடிக்கப்பட்ட மீன்களை தாய்க் கப்பல் மூலமாகச் சேமித்து, பதப்படுத்தி பாதுகாக்கும் திட்டம் வரவேற்கக்கூடியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 71.5 கிலோ மீட்டர் கடற்கரைப் பகுதியில் 44 மீனவக் கிராமங்கள் உள்ளன. 2011–2012 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 44,525 டன் மீன்கள் கிடைத்துள்ளன. அதன் மதிப்பு ரூ.170.1 கோடியாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், கேள்வியைக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் உரையைத் தவிர்த்து சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: ஒரே ஒரு கருத்து. இவ்வளவு மீன்கள் கிடைத்தும், ஒரு freezing centre அல்லது அந்த மீன்களை storage செய்வதற்கு எந்தவிதமான கிடங்குகளும் இல்லை, அமைப்புகளும் இல்லை. அப்படிப்பட்ட திட்டங்களை, மாண்புமிகு தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களை கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய குளச்சல் தொகுதியில் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதையும், அதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1,304 விசைப் படகுகளும், 12,998 நாட்டுப் படகுகளும் உள்ளன. இந்த மீன்பிடி கிராமங்கள்மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 42,500 மெட்ரிக் டன்

2012 ஏப்ரல் 4]

மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இதில் 55 சதவிகிதம், அதாவது, 23,375 மெட்ரிக் டன் மீன்கள் நேரடியாக உணவிற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 5 சதவிகிதம், அதாவது, 2,125 மெட்ரிக் டன் மீன்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 23 சதவிகிதம், அதாவது, 9,775 மெட்ரிக் டன் மீன்கள் உப்பிட்டு கருவாடாகவும், 17 சதவிகிதம், அதாவது, 7,725 மெட்ரிக் டன் மீன்கள் சூரிய ஒளியில் காய வைத்தும் விற்பனை செய்யப்படுகின்றன. எனவே, நேரடியாக உணவிற்கு 55 சதவிகிதம் விற்பனைக்குச் செல்வதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் மீன் பதனிடும் கூடம் தொடர்பான செய்யத்தக்கவென அறிக்கை தயாரித்து, அதனடிப்படையில் மீன் பதனிடும் கூடம் விரைவாக அமைத்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். இதற்குமேல் என்ன கேள்வி? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால், என்னுடைய தொகுதியான குளச்சல் தொகுதியில் அதிகமாக மீன்பிடிக்கக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். அதிகமான மீன் வரத்து இருக்கிறது. அந்தத் தொகுதியில் மீன் பதனிடும் கூடத்தை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் பகுதியிலே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டு, அதனடிப்படையிலே சாத்தியக்கூறுகள் இருப்பின், நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மீன் குளிரூட்டும் கூடம் அமைக்கும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*